**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : STC 3/2025 <br> Sessions : <br> Deposition of Witness for : PW-1 <br> Name : சித்தநாதன் <br> Father's/Husband's Name : பாலகிருஷ்ணன் <br><br> Nationality : Indian | Village:குழவடையான் <br> Age :46 <br> Taluk : உடையார் பாளையம் <br><br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 01.04.2026**

**எதிரி ஆஜரில்லை.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். பிரமான வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரி வழங்கிய 01.11.2024 தேதியிட்ட ரூ.4,00,000/-த்திற்கான காசோலை புசா.ஆ.1 ஆகவும், 13.11.2024 தேதியிட்ட மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை பு.சா.ஆ.2 ஆகவும், நான் எதிரிக்கு அனுப்பிய 25.11.2024 தேதியிட்ட வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய அறிவிப்பு பு.சா.ஆ.3 ஆகவும் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 02.12.2024 தேதியன்று அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்டுள்ளது. அதன் அசல் கவர் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை பு.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே என்னிடம் கடன் பெற்று

தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்து எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் கண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்றுத்தரும்படி பிராத்திக்கிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**